செ.வெ.எண்:54 நாள்-24.08.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக ஆகஸ்ட் 27ம் தேதி மற்றும் ஆகஸ்ட் 29ம் தேதி சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. அதன்படி, 27ம் தேதி அசாவீரன் குடிகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியிலும், 29ம் தேதி ஜெயங்கொண்டம் நகராட்சி மற்றும் சுற்றி உள்ள பகுதிகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும் மறுவாழ்வு உதவிகளுக்கான சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. இச்சிறப்பு முகாம்களில் மாற்றுத்திறனாளி நபர்களான குழந்தைகள் முதல் பெரியவர் வரை கலந்துகொண்டு மாற்றுத்திறனாளி நபர்களுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை, மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, ஊன்றுகோல்கள், நவீன செயற்கை கால்கள், பெட்ரோல் ஸ்கூட்டர், நடைபயிற்சி உபகரணம், பார்வையற்றோருக்கான நவீன ஊன்றுகோல்கள், எழுத்துகளை பெரியதாக்கிகாட்டும் கருவி, காதுக்கு பின்புறம் அணியும் காதொலி கருவிகள், இலவச பேருந்து பயணச்சலுகை அட்டை, கடன் உதவி, பராமரிப்பு உதவித்தொகை, மாத உதவித்தொகை மற்றும் பிற உதவிகளுக்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**